## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 5-ம் தேதி 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.720/2021

பி.வா.சா.1 **சம்பூர்ணம்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எனக்காகவும், 1 மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். 1 முதல் 3 வாதிகளும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் காலம் சென்ற பழனியப்பன் என்பவரின் வாரிசு என்றால் சரிதான். மேற்படி விபரங்களை மறைத்து 6 ம் பிரதிவாதி முருகேசன் என்பவர் காலம் சென்ற பழனியப்பனுக்கு தான் ஒருவர் மட்டுமே வாரிசு என்று வாரிசு சான்று போலியாக உருவாக்கிக் கொண்டுள்ளார் என்றால் சரிதான். போலியாக ஏற்படுத்திக் கொண்ட வாரிசு சான்றை கொண்டு அவரது மகளான 7 ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மோசடியாக ஏற்படுத்திக் கொண்ட வாரிசு சான்று கொண்டு 6,7 பிரதிவாதிகள் சேர்ந்து 8 ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 வாதிகளும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் தாவாச் சொத்தின் கூட்டுச் சுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்படும் சொத்துக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த தயாராக உள்ளேன். வாதிகள் வழக்கில் கோரியுள்ளபடி பரிகாரம் வழங்குவதை பொருத்து 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஆட்சேபணையில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :-** இல்லை